விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 8 ரபி. ஆ 6 இதழ் 343

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21—1—83

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஒருநாள் உண்ணாவிரதம்!

2000 மாணவர் கலந்துகொண்டனர்

(ஏ. வி. மாணிக்கம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை சாதாரண சட்டத்தின்கீழ் விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஒருநாள் அடையாள எதிர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு வ. சு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் சகல பீடங்களையும் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இந்த அடையாள எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விரிவுரையாளர் நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன், மாணவர்கள் திரு. ராஜாஜி, திரு. ஜெயப்பிர

[8-ம் பக்கம் பார்க்க]

● வவனியா ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்

புலேந்திரன் சுட்டுக் கொலை!

(தமது வவனியா நிருபர் சி. விவேகராசா)

ஐக்கிய தேசியக் கட்சியின் வவனியாத் தொகுதி அமைப்பாளர் திரு. கார்த்திகேசு தங்கராசா புலேந்திரன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்! இவருக்கு வயது 40 ஆகும்.

நேற்று முன்தினம் இரவு பிதிலெருமணியளவில் புலேந்திரன் வவனியாவிலுள்ள தமது இல்லத்தில் தொலைக்காட்சியில் 'பேரும் புகழும்' சினிமாப் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது இச் சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது திரு. புலேந்திரனின் மாமியாரும், அவரது உதவியாளரான மோகன் (20 வயது) என்பவரும் கூடஇருந்தனர் என்று கூறப்படுகிறது.

யன்னலூடாகச் சுட்டனர்

கொழும்புக்குச் செல்வதற்காக உடுப்புகளை எடுத்து வைக்கும்படி புலேந்திரன் தமது உதவியாளருக்குச் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் யன்னலூடாக இனம் தெரியாத நபர்கள் புலேந்திரனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

மதிலால் குதித்து

இவரது வீட்டுக்கு மேற்குப் பக்கமாக உள்ள மதிலால் ஏறிக் குதித்து சுமார் 50 யார் தூரத்தில் நின்று, இனம்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு வீட்டின் தெற்குப் பக்கமாக உள்ள மதிலால் ஏறிக்குதித்து தப்பி ஓடிவிட்டனராம்.

நான்கு சூடுகள்

நான்குசூடுகள் புலேந்திரன் மீதுபட்டும் அந்த இடத்திலேயே அவர் சுருண்டுவீழ்ந்து விட்டார் என்றும் அவரது உதவியாளர் மோகனே நோக்கியும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டபோதிலும் அவர் வீட்டுக்குள் ஓடி மறைந்து தப்பித்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இனந்தெரியாத அக்கோஷ்டியினர் தப்பியோடியதும், மோகன் உடனடியாக வவனியா பொலிசாருக்கு, வீட்டிலிருந்து தொலைபேசி மூலம் தெரிவித்தார். பொலிசார் தகவல் கிடைத்ததும் ஸ்தலத்துக்குச் சென்று புலேந்திரனை வவனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோதிலும் அவரது உயிரைக்காப்பாற்ற முடியவில்லை.

புலேந்திரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட நேரம், அவரது மனைவி ராஜமலர்கரி பிரசவம் காரணமாக சுகவீனமுற்று வீட்டின் ஒரு அறையில் படுத்திருந்தார். அவர் பிரசவித்த அந்த ஆண்குழந்தை சில தினங்களுக்கு முன்தான் இறந்துவிட்டது.

புலேந்திரனுக்கு இரு பெண் பிள்ளைகள் உண்டு.

அரசியல் வாழ்க்கை

வவனியா பட்டின சபையின் முன்னாள் உறுப்பினரான புலேந்திரன், 70-ம் ஆண்டு வரை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினராகவும், 77-க்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி வவனியா தொகுதி அமைப்பாளராகவும் இருந்தார், புதுமோட்டை 'இலமணெட்' கூட்டுத்தாபனத்தில் தொழிற் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

பிரேம்போடாத ஜன்னல் ஓரமாக வீட்டின் வாழைத்

(8-ம் பக்கம் பார்க்க)

சிவா - அமிர் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

"புலேந்திரன் படுகொலை மனித இதயம் படைத்தவர்களால் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு எம். சிவசிதம்பரமும், எதிர்க்கட்சி முதலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் புலேந்திரன் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"என்ன காரணத்துக்காக யாரால் திரு புலேந்திரன் சுடப்பட்டார் என்பது தெரியவில்லை. எக்காரணத்துக்காக இக்கொடுஞ் செயல் செய்யப்பட்டிருந்தாலும், அதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"திரு. புலேந்திரன் அவர்களின் மரணத்துக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கின்றோம்"

வவனியா 'சிவா' அனுதாபம்

"புலேந்திரனின் மறைவு பேரதிர்ச்சியையும் பெரும்மன வேதனையையும் தந்துள்ளது"

வவனியா எம். பி. திரு தர. சிவசிதம்பரம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"இதுவரை காலமும் வவனியா மாவட்டத்தில் இவ்வித மான பெரும் வேதனைக்குரிய விடயம் நடைபெறவில்லை"

எக்காரணத்திற்காக எவர் இதைச் செய்திருந்தாலும் பாரதூரமான கண்டனத்துக்குரிய விடயமாகும். எமது பணிபாட்டுக்கும் மனிததர்மத்திற்கும் இது முற்றிலும் ஒரு மாறுன செயலாக அமைகிறது மறைந்த புலேந்திரன் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்" [ஈ]

ஜனதிபதி, பிரதமர் நேரில் அஞ்சலி

வவனியா சோகமயம்

(வவனியா)

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் ஆர். பிரேமதாசா ஆகியோர் நாளை வவனியாவிற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்துவார்கள்.

இவர்களுடன் பல அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம். பீக்களும் நாளை வவனியாவிற்கு வரவுள்ளனர்

நேற்றுக்காலை வவனியா நகரத்திலுள்ள கடைகளில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

வவனியா மாவட்டத்தில் பல இடங்களிலும், சந்திகளிலும், கறுப்புக்கொடிகள் காணப்பட்டன.

வவனியா ரயில் நிலையத்திற்கு சமீபத்திலுள்ள அவரது புதிய இல்லத்தில் புலேந்திரன் சடலம்நேற்று பிற்பகல் மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது.

பெருந்திரளான மக்கள் நீண்ட நேரமாக 'கியூவில்' வந்து அஞ்சலி செலுத்தினர்கள்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, மன்னார் பகுதிகளிலிருந்து பல கட்சி ஆதரவாளர்கள் வந்து அஞ்சலி செலுத்திஞர்கள்.

வவனியா நகரத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுதப்படையினர் காவல் புரிந்து வருகின்றனர். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

"உடல்முழுவதும் பரவலாக காயங்கள் காணப்பட்டன"

மரணவிசாரணையில் சாட்சியம்

(வவனியா)

"இறந்த புலேந்திரனின் தலையில் மூக்கையிலிருந்தும் மண்டையோட்டிலிருந்தும் இரு சன்னங்கள் துண்டுகளான நிலையில் கண்டெடுக்கப்பட்டன, அத்துடன் உடலெங்கும் பரவலாகக் காயங்கள் காணப்பட்டன"

ஐ. தே. கட்சியின் வவனியா மாவட்ட அமைப்பாளர் புலேந்திரன் மரணவிசாரணையில் சாட்சியமளித்த வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி கோ. நிரஞ்சன் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

வவனியா மாவட்ட நீதிபதி கே பெட்டியாகொட முன்னிலையில் நேற்று மரணவிசாரணை நடைபெற்றது

வைத்திய அதிகாரி சோ. நிரஞ்சன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், "இறந்தவரது தலையில் வலதுகாதுப் பக்கத்துக்கு முன்பாக ஒரு காயமும், பின்புறமாக நான்கு உள் சூட்டுக் காயங்களும், தலையில் ஊடறுபக்கத்துத் தாடைக் கருகில் 2 சிறிய காயங்களும், மேல் உதட்டில் ஒரு சிறிய காயமும் காணப்பட்டன' என்றார்.

தலையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியும் இரத்தப் பெருக்கும் புலேந்திரன் இறக்க காரணமாக விருந்தது என்றும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

புலேந்திரனின் உதவியாளர் மோகன் என்பவரும் சாட்சியமளித்தார்.

மரவட்ட நீதிபதி விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பளித்து தொடர்ந்து விசாரணை செய்யுமாறு பொலிசாரைப் பணித்தார். (மா)

யாழ்ப்பாண விளையாட்டரங்கு அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அமைய வுள்ள சர்வதேச விளையாட்டரங்கிற்காக விளையாட்டுத் துறை அமைச்சு, 30 ஏக்கர் காணியை சுவீகரிக்கவுள்ளதாக விளையாட்டுத்துறை, பராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் நேற்று தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண விளையாட்டரங்கில் நவீன கிரிக்கெட் விளையாட்டுக்கான வசதிகளும் பிற விளையாட்டுக்களுக்கான வசதிகளும் கொண்ட ஒரே நேரத்தில் 30 ஆயிரம் பார்வையாளர் அமர்ந்து பார்வையிடக்கூடிய இரங்கமும், பார்வையாளர் மண்டபமும் அமைக்கப்படவுள்ளன. கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிக்கான நவீன வசதிகளும், டெஸ்ட் போட்டிகள் நடத்துவதற்கான முழுவசதிகளும் கொண்டதாக இவ்விளையாட்டரங்கு அமைக்கப்படும்" என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா வழக்கு தள்ளுபடி

(கொழும்பு)

பிரதமர் ஆர். பிரேமதாசாவிடம் 10 லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கா தாக்கல் செய்த நஷ்டஈட்டு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபொழுது வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தார். [உ

வரினைம்பரம்

விற்பனைக்கு

பொலிகண்டி, கடற்கரை வீதியில் 5 அறை, 2 ஹோல், குசினி, கழுச் மற்றும் சகல வசதிகளுடைய வீடு ('அப்' வசதியுமுண்டு) 8 பரப்புகாணி யுடன் விற்பனைக்குண்டு. தென்னை, மா மரங்கள் உண்டு. விலை விபரங்களுக்கு: A. M. விஜயநாதன், கடற்கரை வீதி, பொலிகண்டி, வல்வெட்டித் துறை. 5875

யப்பான் 20'' கலர் T. V. உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு சித்திரா அச்சகம், 310, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (5898)

பயிற்சி

கொம்பியூட்டர் புரோகிராமிங், ரேடியோ - டெலிவிஷன் எலக்ரிக்கல் வயரிங், Hotel Management குறுகிய காலப் பயிற்சிகள், Spoken English ஒரு மாதத்தில் பேச, எழுத வாசிக்கப் பயிற்சிகள். இன்றே வரும் சேரலாம். ஆரம்பம்: 23-01-82. விபரம் நேரில். The School of Computer Studies, 52/1, கனகரத்தினம் கட்டிடம், (வீனஸ் றெக் கோடிங்பார் மேல்மாடி), ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம். (5856)

பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம் (வ/து

ஏல விற்பனை

வெற்றுச்சாக்கு

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 4,000 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 29 - 01 - 83 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக் கூற்றில் வெற்றி பெறுவோர், ஏலத்தில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

பரு: ப. நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை,
1983 - 01-19. 5909

நகராட்சிமன்றம் சாவகச்சேரி

ஆ த ன வ ரி அறிவித்தல்

1983-ம் ஆண்டு 1-ம் கந் தாயத்திற்கு 1982-ம் ஆண் டில் நடைமுறையில் உள்ள விகிதத்தின் பிரகாரம் ஆதன வரி செலுத்தப்படலாம். 1983-ம் ஆண்டு 2, 3, 4-ம் கந்தாயங்களுக்குரிய விகிதம் பின்பு அறிவிக்கப்படும்.

1983-ம் ஆண்டுக்குரிய முழு வரியையும் 1982-ம் ஆண்டுக் குரிய விகிதப்படி 31-01-83-ம் திகதிக்கு முன்பு செலுத்து வோர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் 10% கழிவு வழங்கப்படும்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்றம்,
அலுவலகம்,
சாவகச்சேரி,
19-01-1983. (5910)

உடுப்பிட்டி பல நோக்குக்குக் கூட்டுறவுச்சங்கம்

விளம்பரம்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரகம் பிரிக்கப்பட்ட 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 22-1-83 திகதிக்கு முன்னர் ரூபா 100/- கட்டி மேற்படி சங் கத்தில் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 26-1-83-ற்கு பகல் 1 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாகவிருத்தல்வேண்டும். 'பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், வல்வெட்டித்துறை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.
(5903)

வெள்ளிவிழா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வரி சங்கத்தினர் நடத்தும் வெள்ளிவிழா 23ம் திகதி கல் லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. பழைய மாண வர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி பாக்கியநாதர் அத் தலைமையார் தலைமையில் நடை பெறவுள்ள இவ்விழாவில்யாழ் பேராயர் அதிவண கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை உட்பட பலர் கலந்துகொள் வார்கள்.

உடுப்பிட்டி பல நோக்குக்குக் கூட்டுறவுச்சங்கம்

விளம்பரம்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரகம் பிரிக்கப்பட்ட 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 22-1-83 திகதிக்கு முன்னர் ரூபா 100/- கட்டி மேற்படி சங் கத்தில் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 26-1-83-ற்கு பகல் 1 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாகவிருத்தல்வேண்டும். 'பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், வல்வெட்டித்துறை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.
(5903)

விற்பனைக்கு

CB 125 S HONDA MOTOR CYCLES 9 ஸ்ரீ SERIES இரண்டு விற்பனைக்கு உண்டு.
திங்கள், செவ்வாய், புதன் மூன்று தினங்களிலும் (24, 25, and 26-1-83)
எமது நிறுவனத்தில் பார்வையிடலாம்.

ஏ பவர் அன் கொ. லிமிட்.
இல. 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
A BAUR and Co Ltd.
No. 5, Clock Tower Rood, Jaffna.
Phone: 23156, 23651 (5912)

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1984

மீட்டல் வகுப்புகள்

84ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 31-1-83ல் ஆரம்பமாகின்றன. 81ம் ஆண்டில் குறைந்த பெறுபேறுகள் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப் பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத் தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்

தொலைபேசி எண்: 22617
376, பிரதானவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 5895]

இன்றைய பலன்

ஆனி மாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை

(21-1-83)

மேடம்: கண்ணிக் கனல் கொதிக்கும், கருத்தினில் கர் வம் தோன்றும், நிடீர் திருப் பம் வாழ்க்கையை வழப்படு த்தும், கிலர் வாழ்க்கை அதிஷ் டகரமாக அமையும்.

இடபம்: சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்கள் குடும்பத்தில் அமைதி நிறை வுறும், பெரியவர்களுடன் உற வுகள் பலப்படும், கோண லாலே குன்றிடும் புகழும் சேரும்.

மிதுனம்: இதயத்தில் எரி மலை குமுறும், உறவீட்டி லேயே உபத்திரவங்கள் அதி கரிக்கும், குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், ஆணவப்போக்காக மற்ற வரை வெறுப்பீர்.

கடகம்: புதிய சூழ்நிலை உங்களுக்குப் புத்துணர்ச்சி யைஅளிக்கும், பெரியோர் களின் ஆதரவு தப்பாமல் கிடைக்கும், குடும்ப வாழ் க்கை களைகட்டுபோல் இனிக் கும்.

சிங்கம்: கனிவான பேச்சு, காந்தம்போல் பார்வை, கன் னியர் உறவு, காதலுக்குகும் இடமுண்டு, கவர்ச்சிகரமான நாள், புதிய பாதை வழி திற க்கும்.

கன்னி: பூமிப் பிணக்கு களுக் வழக்கு விவகாரங் களில் மாட்டிக்கொள்ள நேரி டும், வாகனம் செலுத்து வோர் மிகவும் கவனமாக இருக்கவும், எதிலும் உணர் ச்சிவசப்பட வேண்டாம்.

துலாம்: பொன்னுனவாழ்வு பொன்னுலே கிட்டும், கண் ணியம் கடைவிரிக்கும், கட மையும் சிறப்பாய் இருக்கும், பெருமக்களின் பராரட்டுடன் பொருளும் குவியும்.

[7-ம் பக்கம் பார்க்க]

அறிவித்தல்

திருநெல்வேலி கலா மன்ற சனசமூகநிலையத் தின் அதிஸ்டலாபச் சீட்டுக்களின் பரிசுக் குரிய இலக்கங்கள் பின் வருமாறு:

1. 839, 2. 1476,
3. 111, 4. 1087,
5. 1079, 6. 885,
7. 707, 8. 534,
9. 507.

செயலாளர்.
(5908)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலவரி

செலுத்துவோருக்கு

ஓர் முக்கிய அறிவித்தல்

1. 1983-ம் ஆண்டிற்கான சோலவரிக் கட்டணங்கள் கடந்த வருடத்திலும் பார்க்க 2 % வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. 1983 ஜனவரி 31 திகதிக் கிழமை அல்லது அதற்கு முன் இம்மன்றத்திற்குச் செலுத்தப் படும் 1983-ம் ஆண்டின் 4 காலாண்டுகளுக்குமான சோலவரி கட்டணங்களுக்கு 10 % வீதக் கழிவும் முதலாம் காலாண்டுக்கான சோலவரி கட்டணங்களுக்கு 5 % வீதக் கழிவும் வழங்கப்படும்.

சீ. வி. கே. சிவஞானம்.
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-1-83. 5911

மன்னர் செய்திகள்

எஸ். தர்மகுலசிங்கம்

தேங்கும் நிலை நீக்கப்படும்

மன்னர் மாவட்டத்தில் உற பத்திசெய்யப்பட்ட பனம் பொருட்கள் தேங்கிக்கிடக் கும் நிலை நீக்கப்படும். இதற் கான நடவடிக்கைகளை பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா மேற்கொண்டுவருகிறார்.

தனியான ஜெனரேட்டர்

மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலைக்கெனத் தனி யானதொரு ஜெனரேட்டர் வாங்கப்படவுள்ளது. இதற் கென பன்முக வரவு-செல வுத்திட்டத்தின் கீழ் ஒரு லட் சம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய் யப்பட்டுள்ளது.

இடமாற்றம்

மன்னர் உணவுக்கட்டுப் பாட்டதிகாரியாகக் கடமை யாற்றும் திரு. எஸ். பத் குணம் பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு உணவுக் கட்டுப்பாட்டதிகாரி யாக இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு முல் லைத்தீவு உணவுக் கட்டுப் பாட்டதிகாரியாகக் கடமை யாற்றும் திரு. நடேசபிள்ளை இடமாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

மரம் நாட்டு விழா

மன்னர் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதி கார சபையினால் மாதா கிரா மம், நறுவிலிக்குளம் ஆகிய மாதிரிக் கிராமங்களிலும், அரிப்பு, எருக்கலம்பிட்டி ஆகிய சுய உதவி வீடமைப் புத் திட்டங்களிலும் பெப்ர வரி மாதம் முற்பகுதியில் மரம் நாட்டும் விழாக்கள் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை மன்னர் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதி கார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. ஏ. யோசேப் மரியாதை மேற் கொண்டுவருகிறார்.

கல்விக்கு ரூபா 8 லட்சம்

மன்னர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் இவ்வருட பன்முக வரவு-செலவுத்திட் டத்தில் கல்வித்துறைகென 8 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்துள்ளார்.

இந்நிதியிலிருந்து 3 லட்சம் ரூபா செலவில் மன்னருக் கென புதிய கல்விப் பிராந் திய அலுவலகம் ஒன்று அமைக்கப்படும்.

அபராதம்

மைசூர் பருப்பு விற்பனையில் 33 சதம் கொள்ளை லாபம் பெற்ற வர்த்தகர் ஒருவர் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

முருங்கனைச் சேர்ந்த வர்த்த கர் ஒருவர் 4 ரூபா 7 சதமாக விற்பனைசெய்யப்படவேண் டிய 200 கிராம் மைசூர் பருப்பை 4 ரூபா 40 சதமாக விற்பனைசெய்தாரென மன் னர் விலைக்கட்டுப்பாட்டதி காரி திரு. எம். ஏரம்பமூர்த்தி முருங்கன் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந் தார்.

மீலாத் விழா

மன்னர்-தாராபுரம் அரச மினு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் இம்மாதம் 22-ம் திகதி மீலாத் விழா கொண்டாடப்படும். இதற் கான ஏற்பாடுகளை தாரா புரம் கிராமோதய சபையும் மீலாத் விழாக் குழுவினரும் இணைந்து மேற்கொண்டுவரு கின்றனர்.

சுகாதார சேவைக்கு நிதி

மன்னர் மாவட்ட சுகாதார சேவைகளென மன்னர் எம். பி. திரு. பி. எஸ். சூசை தாசன் இவ்வருட பன்முக வரவு-செலவுத்திட்டத்தில் 2 லட்சத்து 75 ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளார்.

இதுதவிர விவசாயம், கிராம அபிவிருத்தி என்பன வற்றிற்கு 45000 ரூபாவை ஒதுக் கீடுசெய்துள்ளார்.

நிர்வாகிகள்

மன்னர்-கரிசல் கிராம அபி விருத்திச் சங்கத்தின் வருடாந் தப் பொதுக்கூட்டம் அண்மை யில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் ஜனப் ஏ. தாவுத், செயலாளர் ஜனப் எம். ஏ. கரீம், பொருளாளர் ஜனப் என். மீராசாகிப்.

11 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அவுஸ்திரேலியா பயணம்

மன்னர் அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே. செந்தில்நாதன் பொதுநிர்வாகம் தொடர் பான மேற்படிப்பை மேற் கொள்ளும் பொருட்டு பெப்ர வரி மாதம் 7-ம் திகதி அவுஸ் திரேலியாவுக்குப் பயணமா வார்.

புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியாவுக்குச் செ லும் மன்னர் அரசாங்க அதி பர் 10 வாரங்கள் மேற் படிப்பை மேற்கொள்ளுவார்.

இக்காலத்தில் வவுனியா அர சாங்க அதிபர் திரு. கே. கி. லோகேஸ்வரன் மன்னர் மாவட்டத்தின் பதில் அர சாங்க அதிபராகக் கடமை ஆற்றுவார்.

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த பாவலர்களின் தமக்குத் தேவையான சீனியை அரிசியுள்ள பல. நோ. கூ. சங்கக் கிளைகளில் கட்டுப் பாட்டு விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு மன்னர் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பதிகுணம் தெரிவித்தார்.

விடத்தல் தீவில் நன்னீர்

விடத்தல்தீவு பகுதியில் 85 அடி ஆழத்தில் நன்னீர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நீர்வள சபையின் வடபிராந் தியப் பகுதியினரால் மேற் கொள்ளப்பட்ட நீர்வள ஆய் வின்போது நன்னீர் கண்டு பிடிக்கப்பட்டது.

சுப்பிரமுனி

வாழ்க்கை வரலாறு தமிழில் வரும்

(சுழிபுரம்)

அமெரிக்கா நாட்டு ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமி கள் வாழ்க்கை வரலாறு கொண்ட ஒரு நூல் தமிழ் மொழியில் எழுதி வெளியிடும் பணியை வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் மேற் கொண்டுள்ளனர். சுவாமிக ளின் வரலாற்றை அறியப் பலர் விரும்பி நிலையச் செய லாளர் திரு. க. வாமதேவனை வேண்டியதன் பயனை நூல் வெளியிட முன்னாள் உதவி அரசாங்க அதிபர் சோ. அரு ணாசலம் அளவெட்டி ஆச்சிர மப் பிரமுகர்கள் உதவியுடன் வரலாறு திரட்டப்பட்டுள்ள தது. (அ)

அபிராமி அந்தாதி

ஆய்வுரை நூல்

(சுழிபுரம்)

அபிராமிபந்தாதி ஐந்தா வது பாடல் ஆய்வுரை நூல் வெளியீடு எதிர்வரும் அமா வாசை தினத்தன்று வெளியி டப்படவுள்ளது. ஆய்வுரை நூலுக்கு ஆகரவு வழங்கும் அன்பர்கள் தொகை தினமும் அதிகரிப்பதால் முழுப்பாடல் களதும் ஆய்வுரை வெளிவர வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (அ)

"அபிவிருத்தியடைந்த நாடுகள்

ஆசிய, பசுபிக் நாடுகளுக்கு ஒத்துழைப்புவழங்கவேண்டும்

டோக்கியோ மகாநாட்டில் கருத்து

டோக்கியோ ஜன 20

ஆசிய, பசுபிக் நாடுகளின் தொழிலமைச்சர்கள் மகாநாடு டோக்கியோவில் நடைபெற்றது.

இம்மகாநாட்டில் ஆசிய, பசுபிக் நாடுகள் பலவற்றையும் சேர்ந்த தொழிலமைச்சர்களுடன், தொழிலதிபர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச தொழில் ஸ்தாபனம் இந்த மகாநாட்டில் பார்வையாளராக பங்கு பற்றியது.

வளர்ச்சியடைந்து வரும் ஆசிய, பசுபிக் நாடுகள் மீது வளர்ந்தொழில் நாடுகளும், மேற்கத்திய நாடுகளும் கொண்டுள்ள கெடுபிடிகள் பற்றி இம் மகாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது. இதுடன் அபிவிருத்தியடைந்த நாடுகள், ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் கைத்தொழில், விஞ்ஞானத்திறன்களை விருத்தி யடையச் செய்யும் விதத்தில் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென்றும் தெரிவிக்கப் பட்டது.

பார்வையாளராகக் கலந்து கொண்டிருந்த சர்வதேச தொழில ஸ்தாபனத்திடம் அபிவிருத்திப் பணிகளுக்கென கட்டுதல் நிதியுதவி வழங்கப் படல் வேண்டுமென்றும் ஆசிய, பசுபிக் நாடுகள் விண்ணப்பித்தன.

இலங்கையின் சார்பில் பிரதி தொழில் அமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேரா இந்த மகாநாட்டில் பங்கு பற்றினார். (கி)

கன்னியாகுமரியில் தீவிபத்து! 60 குடிசைகள் நாசம்!

சென்னை ஜன 20

தீவிபத்தொன்றில் கன்னியா குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 60 குடிசைகள் தீக்கிரையாயின.

இத் தீவிபத்தினால் ஐம்பதினாயிரம் ரூபா நட்டமேற்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டது.

தீவிபத்து ஏற்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் தலைமைச் செயலகத்துக்குவிரைந்த தீயணைப்புப் படையினர் இரவிடரை மணித்தியாலங்கள் வரை செயற்பட்டே தீயைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 200 ரூபா நட்ட ஈடாக வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. (இ)

திருப்பதி ஆலய வீதியில் சிறுத்தைப் புலி!

சென்னை, ஜன. 20

திருப்பதி திருமலை வெங்கடேஸ்வரர் ஆலய வீதியில் சிறுத்தைப்புலி யொன்றின் நடமாட்டம் காணப்படுகிறது!

இந்த சிறுத்தையை தேவஸ்தானத்துக்கு சென்ற பக்தர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டாராம்!

இதனையடுத்தே அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் சிறுத்தை நடமாட்டம் உண்மையான தாகவே தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பாதயாத்திரீகர்கள் சிறுத்தைப்புலி காணப்படுவதாகக் கூறப்படும் தேவஸ்தான வீதி வழியாக நடமாடுவதைத் குறைத்துக்கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்! (கி)

பிரிட்டிஷ் பொலிஸார் மீது வழக்குத் தாக்கல்!

லண்டன், ஜன. 20

கொலைமுயற்சியில் ஈடுபட்டதாகவும், காயப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி இரு பிரிட்டிஷ் பொலிஸ்காரர்மீது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, தாம் தேடிக்கொண்டிருக்கும் கொலைஞர் என நினைத்து தவறுதலாக அப்பாவி ஒருவரை இவர்கள் படுமோசமாகச் சுட்டுக் காயப்படுத்தியிருந்தனர்.

இந்த இருவரும் 'ஸ்கொட்லண்ட்யார்ட்' பொலிஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

காயமடைந்தவர் ஒரு படத் தயாரிப்பாளர். இவர் வயது 26. லண்டன் மாநகர வீதியில் போக்குவரத்து நெருக்கடி காரணமாக தனது சிறிய மஞ்சள்நிற 'மினிஆஸ்டின்' காரை ஒருபக்கத்தில் நிறுத்தி உள்ளே அமர்ந்திருந்தார். இவருடன் இவரது பெண் சிநேகிதியும் இருந்தார்.

தப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலிஸார் மீதும் அண்மைத்தூரத்தில் வைத்தே தமது 'பிஸ்டல்'களை இயக்கினர். இதனாலேயே ஸ்ரெப்பன் வோக்ட்ரோப் என்ற இந்த இளைஞர் படுகாயமடைந்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட இரு பொலிஸாருக்கும் வயது 37. இவர்களின் இன்னுமொருசகாவும் வேலையிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் மீது குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படவில்லை.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர் (கி)

சிரியாவில் ஏவுகணை:

அமெரிக்க ஆட்சேபனைக்கு சோவியத் மறுப்பு!

லண்டன் ஜன 20

'சோவியத்' அதன் அதி நவீன ஏவுகணைகளை சிரியாவில் நிறுவுவதாக அமெரிக்கா தெரிவித்த ஆட்சேபனைகளுக்கு மாஸ்கோவிலிருந்து மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தெரிவித்த ஆட்சேபனையில் மேற்காசியப் பிரதேசத்தில் இஸ்ரேலுக்கு மட்டுமே அதிக பலம் கொண்ட ஏவுகணைகளை வைத்திருக்கும் உரிமை வழங்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்கா தெரிவித்த ஆட்சேபனைகளை சோவியத் தலைமைப்பீடம் மாஸ்கோவிலிருந்து அறிக்கையொன்றின் மூலம் மறுத்துள்ளது. அம்மறுப்பில் சிரியாவில் தனது ஏவுகணைகள் பொருத்தப்படவில்லை என்றும் மாஸ்கோ அறிவித்தது.

சோவியத்துக்கு தனது ஆட்சேபனையை தெரிவித்திருக்கும் அதேவேளை சிரியாவுக்கும் அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது. (கி)

சட்டசபை உபதேர்தல்

சென்னை, ஜன. 20

தமிழக சட்டசபை, திருச்செந்தூர் தொகுதிக்கான உபதேர்தல் அடுத்தமாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது.

திருச்செந்தூர் தொகுதி சட்டசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இம்மாதம் 28ந் திகதி தாக்கல்செய்யப்படுமென்றும், அடுத்தமாதம் 5ந் திகதி அவை பரிசீலிக்கப்படுமென்றும், 7ந் திகதி மனுக்கள் வாபஸ்பெறப்படும் இறுதித் திகதியென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

ஈச்சமோட்டை இளைஞர் கழகம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை இளைஞர்கழகம் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 29ந் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 5ந் திகதி வரை நடத்தியதுடன் இறுதியாவையொட்டிக் கரபந்தாட்டப் போட்டிகளையும் நடத்தியது. (அ)

பாப்பரசர் கொலை முயற்சி:

போலந்து செய்தி நிறுவனம் தகவல்

வார்சோ, ஜன. 20

"பரிகத்த இரண்டாவது பாப்பரசர் ஜோன்போல்லை கொலைசெய்வதற்கான முயற்சியில்பங்கு கொண்டதாகக்கூறப்படும் குற்றச்சாட்டின்பேரில், செர்கி ஆர்சி ஆண்டலுவ் என்ற பல்கேரியப் பிரஜை. ஒரு மாதத்திற்கு முன்னர் ரோம் நகரில் கைது செய்யப்பட்டார்; இவருக்காக இத்தாலியவழக்கறிஞர்கள் வாதாடினர்" என்று போலந்துச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

"செர்கி ஆண்டலுவ் குற்றவாளியல்ல என்றும், அவருக்குச் சம்பந்தமில்லாத வீண் பழி அவர்மீது சுமத்தப்பட்டுள்ளது என்றும் நாங்கள் கருதுகிறோம்" என்று அவரது வழக்கறிஞர்கள் கியூசெப் காஸ்சோலோவும், லாருசாவும் கூறுகின்றனர். அண்டலுவுக்கு எதிரான குற்றச்சாட்டு 'மிகவிசித்திரமானது' என்றும் மிகவும் சந்தர்ப்பத்திற்கிடமானது என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

இத்தாலிய உளவுத்துறைக்கும். ஏற்கனவே போப்பைக் கொலைசெய்ய முயன்ற துருக்கியைச் சேர்ந்த 'அக்கா'வுக்கும் பயங்கரவாதிக்கும் இதையே 1981 டிசம்பர் 29ந் திகதி இருந்த தொடர்புகள் பற்றி அண்மையில் இத்தாலிய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டதுகுறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதி இலாரியோ மார்ட்டெல்லி, மிக நேர்மையாக நடந்துகொள்வார் என்றும் இம்மாத இறுதிக்குள் சேர்கி ஆண்டலுவ் விடுதலை செய்யப்படுவார் என்றும் மேற்கண்ட வழக்கறிஞர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

தாய்மையடையும் பெண் பொலிஸாருக்கு விசேட ஆடை!

நியூயோர்க், ஜன. 20

திருமணமான பெண் பொலிஸார் தாய்மையடையும்போது அணிந்துகொள்வதற்கென விசேடமான ஆடையொன்றை நியூயோர்க் பொலிஸார் அறிமுகஞ் செய்யவுள்ளனர்!

நியூயோர்க் பொலிஸ் சேவையில் உள்ள பெண் பொலிசாரில் பலர் அடிக்கடி தாய்மையடைவதையடுத்தே இந்த ஏற்பாடு!

இந்த புதிய ஆடை, கர்ப்பதிகளுக்கு வசதியான வகையில் நீலநிறத்துடன் மேற்சட்டையையும், அதே நிறத்தில் நீளமான அகன்ற காற்சட்டையையும் கொண்டிருக்கும்.

நியூயோர்க் பெண்பொலிசைச் சேர்ந்த சுசன்மக்லெலு என்ற பெண்ணே இந்த ஆடையை வடிவமைத்துள்ளார்.

நியூயோர்க் நகரத்தில் 22,300 பொலிஸார் சேவையில் உள்ளனர். இவர்களில் 1,330பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது! (கி)

✭ தென் இந்திய

இந்து ஆலயங்கள் கலைக் களஞ்சியம்!

சென்னை, ஜன. 20

தென்இந்திய இந்து ஆலயங்களின் கட்டிடக் கலைபற்றிய கலைக்களஞ்சியம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்திய கல்வி அமைச்சின் செயலாளர் திருமதி கபிலவத்சாயன் இதனைத்தெரிவித்தார்.

இக்கலைக்களஞ்சியம், அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்றின் அனுசரணையுடனேயே வெளிவரவுள்ளது.

கி. மு. 200ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியிலிருந்து தென்னக மூவேந்தர் காலப் பகுதிவரை கட்டப்பட்ட தென்னிந்திய இந்து ஆலய கட்டிடக் கலைபற்றிய தகவல்கள் இக்கலைக்களஞ்சியத்தில் அடங்கவுள்ளன.

காஞ்சிபுரம், சிதம்பரம், மகாபலிபுரம், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயம்ஆகியன பற்றிய தகவல்களும் இக்கலைக் களஞ்சியத்தில் அடங்கவுள்ள சிலவாகும். [கி]

பாரத குடியரசு தின அணிவகுப்பு: 'ரி-72 டாங்கி'கள் பவனி சிறப்பம்சம்!

புதுடில்லி ஜன 20

இந்திய குடியரசு தின வைபவம் இம்முறையும் வழமைபோலவே பிரமாண்டமான முறையில் கொண்டாடப்படவுள்ளது.

இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில் சிங், பாதுகாப்புப் படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார்.

திரு. ஸெயில் ஜனாதிபதியான பின்னர் கலந்துகொள்ளும் முதலாவது குடியரசு தின வைபவம் இதுவாகும்.

இந்திய இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த இரண்டாயிரம் வீரர்கள் அணிவகுப்பில் கலந்து கொள்வர்.

இந்த அணி வகுப்புகளில் சிறப்பம்சமாக திரு. ஸெயில் ஜனாதிபதியான பின்னர் கலந்துகொள்ளும் முதலாவது குடியரசு தின வைபவம் இதுவாகும்.

இந்திய இராணுவத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த இரண்டாயிரம் வீரர்கள் அணிவகுப்பில் கலந்து கொள்வர்.

இந்த அணி வகுப்புகளில் சிறப்பம்சமாக ரி – 72 ரக டாங்கி வண்டிகளின் பவனி அமையும் இவற்றை இந்தியா புதிதாகக் கொள்வனவு செய்துள்ளது

விமான எதிர்ப்புச் சக்தி, இரசாயன ஆயுத எதிர்ப்புச் சக்திகளைக் கொண்டது. இந்த ரி – 72 ரக டாங்கி வண்டி இவற்றை இரவு வேளைகளிலும் பயன்படுத்தலாம். (கி)

வெள்ளிவிழா

[பக்கம் 2 தொடர்ச்சி]

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளார் குருப்பட்டம் தரித்து 25 ஆண்டுகள் பூர்த்தி யடைவதை முன்னிட்டு கல்லூரி பழைய மாண

(2-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

கழுவதை மாற்றிவிடுவதிலோ, மனதிற்கு திருப்தி அளிப்பதிலோ இல்லை, கவிதையின் வெற்றி! ஆனால் அடையமுடியாததை அடைவதற்காக மறுபடியும் முயற்சி செய்யும்படி நம்மை எழுப்பிவிடுவதிலே தான் கவிதை வெற்றி பெறுகிறது.

— எமர்சன்

நமது நோக்கு

எலி ஓட்டம்

கடந்த ஆட்சியில் சொழும்புப்பிரபல பத்திரிகையொன்று ஜனநாயகத்தின் மறைவு குறித்து ஒரு மரண அறிவித்தல் பிரசுரித்திருந்தது.

'ஆட்சிக் கொள்கையில் ஒரளவிற்கு சர்வாதிகாரம் தவிர்க்கமுடியாதது என்று அன்றைய அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா பாராளுமன்றத்தில் பேசியதையும் அப் பிரகாரம் விவாதங்கள் நடைபெற்றதையும் கேலி செய்யவே திரு. டி. ஈ எம் ஒக்நேசி காலமானார் என்றும் ஈமக்கிரியைகள் பற்றிய தகவலும் வெளிவந்தன. பெரும்பரபரப்பை ஏற்படுத்திய பிரசுரம் அது.

இவ்வறிவித்தலை வாசித்த பலர் யாரோ ஒருபெரியவர் உண்மையில் சிவபதமடைந்ததாகக் கவலையுற்றனர். இறுதி அஞ்சலியில் பங்கு பற்ற விரும்பியவர்களும் ஆவ லடையாளம் தெரியாது திகைத்தப்பட்டனர்; பின்பு துப்புத்துலங்கியது.

இன்று நிலைபரம் வேறு. இரண்டு தேர்தல்கள் முடிவடைந்து விட்டன சர்வாதிகாரம் பற்றிய விவாதம் அடக்கத்தில் இருக்கிறது. 'மக்கள் தீர்ப்பு' ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் காவலில் ஆட்சியை ஒப்படைத்திருக்கிறது அவர்நினைத்ததெதனையும் செய்யலாமென்றே. அல்லது அவர் இட்டது சட்டமென்றே கருதப்படுவதற்கில்லை.

அரசியல் சாசனத்தை கமைய, பாராளுமன்ற ஆட்சியில் நிர்வாக ஜனாதிபதியாக மீண்டும் ஆறு வருடங்கள் பதவியில் அமர்கிறார்.

காலிமுகத்திடலில் சுதந்திரதினத்தன்று சத்தியப் பிரமாணம் நடைபெறுவதாலும் அது மக்கள் ஆட்சியின் ஒரு அறிகுறி, கொண்டாட்டங்கள் கப்பிரமாக நடைபெறுவதற்குரிய ஆயத்தங்கள் முடிவடைகின்றன.

இந்த மங்கலமான சூழ் நிலையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்துக்கு தலைமைதாங்கிய ஜனாதிபதி ஜெயவர்த்தனா எலி ஒன்று ஓடுவதைக் கண்ணுற்றதும் (rat)என்று கூறிவிட்டு அவருக்குரித்தான சமயோசித புத்தியுடன் 'democrat' என்று கேலிசெய்து அவையைச் சிரிக்கவைத்தாராம். கருத்து நிறைந்த கிரிப்பு அது; வெறும்குதூகலமல்ல.

ஜனாதிபதியின் மதிநுட்பத்தை நாம் பலமுறை பாராட்டி வந்திருக்கிறோம்; இதுதடவை அது விசேட பாராட்டுக்குரிய விடயம்.

பூனை குறுக்கே ஓடுவது மிகப் பொல்லாப்பான சகுனம். இதுஅப்படியல்ல; இருப்பினும் எலியுடன் சம்பந்தப்பட்ட ஆங்கில சொற்கூட்டங்கள் அனைத்தும் சந்தோஷத்துக்குரிய நடவடிக்கைகளையே கருதுகின்றன. அவற்றையெல்லாம் தாமே மறக்கவும் ஒதுக்கவும் மறப்பிக்கவும் ஓடிய (rat) எலியையும் 'democrat' இல் உள்ள 'rat' எலியையும் கிலேடை வைத்துச்சிரிக்க உதவிய அரசியல் விவேகம் ஒரு சாணக்கியம் என்பதில் ஐயமில்லை. இன்றைய ஜனநாயகவாதி திரு. எலி என்பதை எவரும் அறியவேண்டும்.

உண்மையில் இன்று இந்நாட்டில் நடைபெறுவது (rat race) எலி ஓட்டமே! அதனை தக்க இடத்தில், தக்க நேரத்தில் நினைவூட்ட ஓடிய எலி ஞானமூர்த்தியான விநாயகரின் ஊர்தியே! மூஷிக வாகனின் செய்தியை அது கொண்டு வந்தது.

"கிரீடம் சூடும் தலையில் தான் கவலை குடிகொள்கிறது" என்பது ஷேக்ஸ்பியரின் வாசகம் அவருடைய அழகிய ஆங்கில மெழியிலேயே எலி ஓட்டத்தின் இலக்கணம் அலங்காரமாக வரையப்படுகின்றது.

இன்று பாராளுமன்றத்தை எவ்வாறு அமைப்பது? தேசிய அரசு என்பதனுல் ஆட்கள் யார்? அதற்கும் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் சிறில் மத்தியூ 'பலலி' சொல்லுகின்றார். எதிர்க்கட்சிகளுடன் எவ்வித தொடர்பும் ஆகாதென்கின்றார்; இது ஒரு அரசியல் 'கொடி' வீடுவதாயும் இருக்கலாம்.

எத்தனை அமைச்சர்கள்? எத்தனை எம்பிக்கள்? அமைச்சின் துறைகளை அதிகரிப்பதா? அல்லது அமைச்சுகளைப் பெருக்கி துறைகளைச் சுருக்குவதா? தமிழ் அமைச்சர்கள் எத்தனை, எவ்வாறு கூடாரமடிப்பது? கட்சி மாறிய 'எலிகளை' என்ன செய்வது? — இவ்வித இத்தனைகளை ஜனாதிபதியின் கவனத்தை ஈர்த்துக் கொண்டேயிருக்குன்றன. இவற்றையெல்லாம் எவ்வாறு எவ்வித பாராளுமன்ற திருத்தங்களில் சீர் செய்வது?

அதிகாரம் ஏறுவதில் நிலவும் போட்டியை மட்டும் அன்று ஒடிய 'எலி' குறிப்பிடவில்லை.

எந்தத் துறையிலும் ஜனநாயகம் என்ற போர்வையில் கடும் போட்டி வாழ்வே அதிகரித்து வருகின்றது. தட்டிப்பறிக்கும் வியாபாரம்; புதுப்பணக்காரர் அர்த்தஇராத்திரியில் பிடிக்கும்குடையும் செருப்பும், வாழ்க்கை முறைகளில் ஏற்பட்டுவரும் தலைகீழான மாற்றங்கள்; இவையெல்லாம் பணம் எங்குண்டோ அந்த இடத்தில் ஆரம்பமாகின்றன. நீருயர நெல்லுயரும் பாங்கு தார்மீகம் தறிகாலிகலீயில் சென்றிருக்கும் நிலை.

நேர்மையாகப் பிறந்து வாழும் நாட்டில் உழைக்கும் வசதிகள்; அவற்றால் கிடைக்கும் வருமானங்கள், மனித அடிப்படை உரிமைகள் – போதிய உணவு உடை, கல்வி, தொழில் அனைவருக்கும் கிட்ட உதவும் அரசியல் சமுதாய நெறிமுறைகள் அனைத்தும் தற்சமயம் தாழ்வடைந்தன.

ஆட்சியில் இடம்பிடித்தவர்கள்; நிரந்தர அதிகாரிகள், பெரியோர்கள், பெற்றோர்கள் – இனிவரும் ஆறு ஆண்டுகால வாழ்வில் செய்யும்உபதேசங்கள் இன்றைய இளைஞருக்கு உபகதைகள் போல் தோன்றுகின்றன. சொல்லொன்று செயல் இன்னொன்று.

பாடசாலைகள், டியூட்டரிகள், பல்கலைக்கழகங்கள் திறப்பதும், மூடுவதுமான இருபெரும் நிகழ்ச்சிகளும் ஒழுங்காய் நடந்துகின்றன.

மாணவர் குழப்பம் ஆரம்பமானதும் பல்கலைக்கழகங்கள் மூடுவதும், பல்கலைக்கழக மாணவர் குழுத்தலைவருக்கு அறிவிடுவதுமே உபதேசந்தர்களின் முக்கிய பணியாகி தோன்றுகின்றது. மட்டக்களப்பு பேராதனை இன்று ஜெயவர்த்தனபுரம்!

வளர்ந்தோர் சமுதாயத்தில் எள்ளளவும் நம்பிக்கையற்ற இளைஞர் உலகத்தை இந்த எலி ஓட்டத்திலிருந்து மீட்பதெங்ஙனம்?

மற்றவர்களை மீட்டார்; தம்மைத்தப்பவைக்கமுடியவில்லை", என்று சிலுவையில் அறைபட்ட ஜேசு நாதரைச் சுற்றிநின்று ஏளனம்பண்ணிய வர்களின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து நலம்தான் தான்தப்பிடவேண்டுமென்று நினைபவர்கள் நிறைந்த சமூகம் உய்யமாட்டாதென்பது உறுதி.

க. பொ. த. (உயர்தரம்) ஆசிரியருக்குமட்டும் சேவை நீடிப்பு?

(மாவிட்டபுரம்)

க. பொ. த. (உயர்தர) வகுப்புகளில் போதிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும்இனி மேல் சேவை நீடிப்பு வழங்கப்பட இருக்கிறது.

பாடசாலைகளில் பலதுறைகளிலும் கடமைபுரியும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதையடைந்தாலும் பாடசாலையின் தேவை கருதி சேவை நீடிப்பு வழங்கப்படுவந்தது.

தற்போது கல்வியமைச்சு பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிருபத்தில் க. பொ. த. (உயர்தர) வகுப்பில் போதிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டுமே சேவை நீடிப்பு வழங்கப்படவேண்டுமென தெரிவித்துள்ளதுடன் சேவை நீடிப்பு வழங்கப்படுபவர்கள் க. பொ. த. (உயர்தர) வகுப்பில் குறிப்பிட்ட அளவு பாடநேரங்களை எடுப்பவர்களாக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு சேவை நீடிப்பு வழங்கப்படும் விடயத்தில் வட்டாரக் கல்வியதிகாரிகளின் சிபார்சும் பெறப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகா கும்பாபிஷேகம்

(புலோலி)

பருத்தித்துறை புலோலி மேற்கு ஆதியடி அருள்மிகு விநாயகராலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 26ம்திகதி பிரதமகுரு கிரியா கால முத்தாமணி சிவஸ்ரீ சமகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 24ம், 25ம், 26ம் திகதிகளில் சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள் என்பனவும் இடம்பெறுமென ஆலய முகாமையாளர் திரு க.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

வேதனம் வழங்க தாமதம்!

கல்வியதிகாரிகள்கவலை

(மாவிட்டபுரம்)

க. பொ. த. (சாதாரண) பரீட்சையின்போது விஞ்ஞான ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக புகார் கூறப்படுகிறது. மாவட்டத்தில் 20 கல்வியதிகாரிகள் இவ்வாறு கடமை புரிந்து வேதனம் கிடைக்காமையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

க. பொ. த. (சாதாரண) பரீட்சையின்போது விஞ்ஞான ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் அவர்கள் பாதிப்புற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

நடந்துமுடிந்த க. பொ. த (சாதாரண) பரீட்சையின் போது விஞ்ஞானபாட பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பொலிஸ்நிலைய பாதுகாப்பு அறைகளில் 2 கல்வியதிகாரிகள் வீதம் நியமிக்கப்பட்டிருந்தனர். யாழ் மாவட்டத்தில் மட்டுமே விசேடமாக இந்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பரீட்சையை முன்னிட்டு 12 தினங்கள் முழுநேர வேலை செய்த இந்த கல்வியதிகாரிகளுக்கு வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக புகார் கூறப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் 20 கல்வியதிகாரிகள் இவ்வாறு கடமை புரிந்து வேதனம் கிடைக்காமையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (உ)

தீவுப்பகுதி பஸ்கள் பண்ணைக்கு மாற்றும் பிரச்னை

யாழ். முதல்வர் விளக்கம் தருகிறார்

தீவுப்பகுதி பஸ்கள் பண்ணைக்கு மாற்றப்படுதல் தொடர்பில் கடந்த 12-01-83 ஆம் திகதிய யாழ்ப்பாண மாநகரசபையில் பொதுக் கூட்டத்தில் சபையின் தகவலுக்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்டது 10-01-83 ஆம் திகதியிடப்பட்ட வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரின் கடிதமே.

பயணிகளிடமிருந்தும் காவலூர் பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற ஆட்சேபனைகள் காரணமாக தம்மால் 14-01-83 இல் தீவுபகுதிச் சேவைகளுக்கான பஸ் நிலையத்தைப் பண்ணைக்கு மாற்ற இயலாமைக்கு அவர் வருத்தம் தெரிவித்தார். மேலும் அது விடயமாக ஒரு தீர்மானத்துக்கு வரும் பொருட்டு எதிர்க்கட்சித்தலைவர் காவலூர் பாராளுமன்ற உறுப்பினர் பொலிசாருடன் தம்மையும் உள்ளடக்கியதான ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டும்படியே வட பிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் அக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

14 – 01 – 83 ஆம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் 'காவலூர் எம். பி. ஆட்சேபத்துக்கு கூட்டணி உறுப்பினர் கண்டனம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் "யாழ் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து தீவுப் பகுதி பஸ்களை பண்ணை நிலையத்திற்கு மாற்றுவதென்ற முடிவைத் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் கண்டித்து தமக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைத்திருப்பதாக முதல்வர் தெரிவித்தார் என்றிருப்பது தவருனதாகும்.

ஆகவே, தீவுப்பகுதி பஸ்களை பண்ணை நிலையத்திற்கு மாற்றுவதென்ற முடிவு தொடர்பாக காவலூர் பாராளுமன்ற உறுப்பினர் எமக்குக் கடிதம் எழுதினார் என்று சபைக்கூட்டத்தில் யாம் கூறவில்லை.

தீவுப் பகுதிபஸ்களை பண்ணைக்கு மாற்றும் முடிவு தன்னிச்சையாக யாழ் மாநகரசபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முடிவல்ல இதனைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். சம்பந்தப்பட்ட சகலரது வேண்டுகோளின் பேரில் இ. போ. ச. வினால் மேற்கொள்ளப்பட்டதே இந்த முடிவு. யாழ்ப்பாண பஸ் நிலையச் சூழலில் பெரியகடைப் பகுதிகளில் வாகன நடமாட்டம் அதிகரித்து இருப்பதால் வாகனப் போக்குவரத்துக்கும் பாதசாரிகளது நடமாட்டத்துக்கும் ஏற்பட்டிருக்கும் இடைஞ்சல் பெரும் தலைவலியாக மாறியிருப்பது யாவரும் அறிந்ததே.

ஆகவே அதன் தொடர்பில் தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்களையும், அதே பாதை களில் ஓடும் மினி பஸ்களையும் பண்ணை நிலைமத்திற்கு இடம் மாற்றுவது பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று 31-12-82 ஆம் திகதி சபையின் செயற்குழு அறையில் எம்மால் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் கௌரவ சபை உறுப்பினர்களான மாநகர ஆணையாளரோடு வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தகுதிவாய்ந்த அதிகாரி திரு. எஸ். கனகரெத்தினம் அவர்களோடு மற்றும் இரு சக அதிகாரிகளும் பொலிஸ்பகுதி சார்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ரி மனோகரனும் போக்குவரத்துக்குப் பொறுப்பாக), உதவிப் பொலிஸ் பரிசோதகர் திரு. து. குகனேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தனர்.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்பிரகாரம் ஏதாவது ஒருபகுதி பஸ்களை பண்ணை பஸ் நிலையத்திற்கு மாற்றுவது குறித்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் தகுதி வாய்ந்த அதிகாரி தமது சக உத்தியோகத்தர்களுடன் ஆலோசித்து பின்னர் அறிவிக்கவேண்டுமென்பதற்கு இணங்க வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் மேற்கொண்ட முடிவே தீவுப்பகுதிக்கான பஸ் சேவைகளை பண்ணைக்கு இடம்மாற்றுவதென்ற முடிவு ஆகும்.

அவர்களது முடிவின் பிரகாரம் பயணிகளதும், மினி பஸ் சேவைகளை நடத்துவோரதும் வசதியை உத்தேசித்தும் வாகனப் போக்குவரவைப் பெரிய கடைப் பகுதியில் ஓரளவாவது இலகுவாக்குமென்ற காரணத்தினாலும் தீவுப்பகுதிக்கான மினிபஸ் சேவைகளையும் ஒரே இடத்திற்கு அதாவது பண்ணை பஸ் நிலையப் பகுதிக்கே மாற்றுவதென்ற முடிவை மட்டும் சபை செய்திருந்தது.

பண்ணைக்கு மேற்படி பஸ் சேவைகளை இடமாற்றும் முடிவு 09-01 83ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநகர உறுப்பினர்களது மாதாந்தச் சந்திப்பின்போது தமிழர்விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், தலைவர் மு. சிவசிதம்பரம், யாழ். பா. உ. திரு வெ. யோகேஸ்வரன் ஆகியோர் சமூகத்தில் உறுதிசெய்யப்பட்டது. யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து இந்த முடிவுக்கு எதிராக ஆட்சேபனை வராது காத்துக்கொள்ள வேண்டியது அவர்களது பொறுப்புஎன நாம் அப்போது தெரிவித்தோம்.

வாகனப்போக்குவரவுக்கான நெருக்கடிதவிர்ப்பதற்கு நாம நடவடிக்கை எடுத்தது சரி. பாராளுமன்ற உறுப்பினர்

(5-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி ஆசிரியர்களுக்கு
காசுக்கட்டளைகளாகச் சம்பளம்
அடுத்தமாதம் முதல் அமுல்?

(தொடர்ச்சி)

வடபகுதி ஆசிரியர் சம்பளப் பிரச்னை சம்பந்தமாகக் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் கூட்டணித் தூதுக்குழுவினருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வடபகுதி ஆசிரியர்களுக்குச் சம்பளப் பணத்தை இனிக் காசுக் கட்டளைகளாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதேமாதம் அடுத்த மாதத்திலிருந்து இது நடைமுறைக்கு வருமென நம்பப்படுகிறது.

இந்த ஆசிரியர்களின் சம்பளத்தைத் தனித்தனியாகக் காசுக்கட்டளைகளாக வழங்குவதற்கான தீர்மானம் கல்வி அமைச்சரின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கும், தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவினருக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையின்போது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டு, கல்வி அமைச்சு அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் நடந்த ஆசிரியர் சம்பளப்பணக் கொள்ளையைத் தொடர்ந்து அதிபர்கள் சங்கமும் கல்விசாலுவலகர் சங்கமும் சம்பளத்தைக் காசோலையாக வழங்கவேண்டுமெனக் கோரியபோது, காசோலையாக வழங்குவதற்குத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், அதிபர்களுக்குள்ள கஷ்டங்கள் பற்றியும் சுட்டிக்காட்டியது.

இப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படாததினால் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவினர், கல்வி அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து இதற்கு ஒரு சுமுகமான தீர்வைச் சமர்ப்பித்தனர். காசுக்கட்டளைகளாகச் சம்பளத்தை வழங்குவதே இத்தீர்மானமாகும். இத்திட்டத்திற்குக் கல்வி அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்குமென்றும், அதேமாதம் அடுத்த மாதம்முதல் ஆசிரியர்களின் சம்பளம்காசுக் கட்டளையாக (மணி ஒடர்) கிடைக்குமென்றும் திரு. மகாசிவம் நம்பிக்கை தெரிவித்தார்.

(கா)

பாடசாலை அதிபர் பதவிகள்
பரீட்சைக்கு தோற்றியவருக்கே முதலிடம் கொடுக்கவேண்டும்
ஜனாதிபதி, அமைச்சருக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

கடந்த ஐந்து ஆண்டுகளாக பதவியுயர்வுக்காகக் காத்திருக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் கடமையாற்றும் சொந்த மாவட்டங்களிலேயே அதிபர்களாகக் கடமையாற்ற ஆவன செய்யுமாறு கோரி ஆனைக்கோட்டை அ. மி. பாடசாலை ஆசிரியரும், ஆசிரிய தொழிற் சங்கவாதியுமான திரு. ந. சிவபாதம் கல்வியமைச்சர், ஜனாதிபதி, பிரதம மந்திரி, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பியுள்ளார்.

அம்மகஜரில் அவர் தெரிவித்திருப்பதாவது;-

நானும் எனது நண்பர்கள் சிலரும் நான்காம்தர, ஐந்தாம்தர அதிபர் பதவிகளுக்காக 1977 டிசம்பர் 2-ந்திகதிய 294 வது இலக்க வர்த்தமானியில் அறிவித்தபடி விண்ணப்பத்துடன் பரீட்சைக்கட்டணமும் செலுத்தி 1978 மாசி மாதம் 28ந் திகதி பரீட்சை எழுதினோம்.

இப்பரீட்சையில் சித்தி அடைந்த பலருடன் நாமும் 1978 நவம்பரில் நேர்முகப் பரீட்சைக்காகக் கொழும்பு சென்றோம். 1979 ஜனவரியில் சிலருக்காவது அதிபர் பதவி கிடைக்கலாமென எதிர்பார்த்தோம்.

பின்னர் 1981 ம் ஆண்டுக் கடைசியில் மீண்டும் இரண்டாவது நேர்முகப்பரீட்சைக்கு அழைப்புக் கிடைத்தது. 1982 ம் ஆண்டு முற்பகுதியில் இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு சென்ற எமக்கு அதிபர் நியமனம்கிடைக்குமேன எதிர்பார்த்தோம். இன்று வரை எவருக்காவது இந்நியமனம் கிடைக்கவில்லை.

இலங்கையிலுள்ள மொழி வழித் தொழிற் சங்கங்களின் சார்பில் மட்டக்களப்பில் ஒரு வார பயிற்சி வகுப்பு நடந்தது. 11-5-82 நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் திரு. எம். எச். எச். ஆரியரத்தினஇ இன்னும் இரண்டு வாரத்தில் 1600 அதிபர் பதவிகள் கிடைக்குமெனப் பகிரங்கமாகச் சொன்னார்.

அப்படித் தெரிவித்து எட்டு மாதங்களாகியும் இன்னும் எவருக்கும் நியமனம் கிடைக்கவில்லை.

இது இப்படி இருக்க கடந்த மாதம் அதிபரின் கடமைகளைச் செய்வதற்கு நியமிக்கப்பட்ட பலருக்கு அப்பாடசாலைகளிலேயே நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

பொறுப்பாசிரியராகஇருந்த சிலர் நிரந்தரமாக்கப்பட்ட நிலையில் பரீட்சை எடுத்து இரு தடவைகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் சிலர் இன்று இலேப்பாறியுமுள்ளனர். வேறு சிலர் இறந்தும் விட்டனர்.

தகைமைக்கு முதலிடமளிப்பதாலும் நேர்முகப் பரீட்சைக்கு இரு தடவைகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டோருக்கே பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

எனவே ஆண்டுகாலமாகப் பதவி உயர்வுக்காகக் காத்திருக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கடமையாற்றும் சொந்த மாவட்டங்களிலேயே அதிபராகக் கடமையாற்ற ஆவன செய்யுமாறு வேண்டுகிறோம்.

அராலியில்நாளைநடைபெறும்
ஆண்டுவிழாவும் நாடகங்களும்

(அராலி)

அராலி ஞானவைரவர் ஆலய முன்றலில் நாளை நடைபெறும் அராலி தெற்கு கலவித்துறை சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் சிறப்புரைகள், விவாத அரங்கு ஆகியனவும், நாடகங்களும் மேடையேறவிருக்கின்றன.

சங்கத் தலைவர் திரு. இ. சந்தமுத்து தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், சோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம், வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. செந்தில் வடிவேல் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றம் அளிக்கும் 'இலங்கை வேந்தன்' கலைஞர்கள் பங்குபற்றும் சரித்திர நாடகமும், வண்ணை கலைவாணர் நாடக மன்றம் அளிக்கும் நகைச்சுவை நாடகமும் இடம்பெறவிருக்கின்றன.

குற்றப்பத்திரம் தாக்கலானது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து உருக்குத் தகடுகள் களவாடியது தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள்மீது குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பொறியியலாளர் நரேந்திரகுமார் மேதர் என்பவரது பொறுப்பிலிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உருக்குத் தகடுகள் திருடியதாக தங்கையா தியாகராஜன், நாகூரான் ஆர்தீன், நாகலிங்கம் ரவீந்திரன் ஆகிய மூன்று நபர்கள் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசார் மேற்படி குற்றப்பத்திரத்தை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

மூன்று சந்தேகநபர்களும் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதால் நீதிபதி விசாரணையை பெப்ரவரி 14-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

"புதிய பாதை ஊடாக பஸ்சேவை நடத்த ஆவன செய்க"

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் – வன்னேரிக்குளம் இணைப்புப் பாதையின் திருத்த வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 75 ஆயிரம் ரூபாவில் இருந்தே இவ்வீதி திருத்தம் நடைபெற்று வருகிறது. ஸ்கந்தபுரம்-வன்னேரிக்குளம் பிரதான வீதியைவிட நாற்பது மைல்கள் ஸ்கந்தபுரத்திலிருந்து-வன்னேரிக்குளம் செல்ல இந்த இணைப்பு வீதி குறைவாக உள்ளதாலும் இவ்வீதியை அண்மையே குடிசனம் அதிகமாக உள்ளதாலும் பாதை முற்றாகச் சீர்செய்யப்பட்டதும் இவ்வீதி ஊடாக பஸ்சேவையை நடத்த ஆவன செய்யுமாறு கிளிநொச்சி எம். பி.யை வன்னேரிக்குளம் பகுதி கிராமோதயசபைத் தலைவர் திரு. ஆ. சோமசுந்தரம் பிள்ளையும் விசேடசேவை அலுவலர் திரு. கு. பஞ்சலிங்கமும் கேட்டுள்ளனர். (அ)

16 பணிப் பெண்கள் வந்துசேர்ந்தனர்

(கொழும்பு)

குவைத்துக்குச் சென்ற பதினாறு இலங்கைப்பணிப் பெண்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

அங்கு சென்றடைந்த மூன்று நாட்களில் இவர்கள் இலங்கைவந்த முதலாவது விமானத்தில் திருப்பி அனுப்பப்பட்டனர். போலிப் பாஸ் போர்ட்டுகளுடன் இவர்கள் பயணம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

யாருடையது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ரோட்டில் மூளாவைச் சந்திக்கு அருகில் ஓர் அடையாள அட்டையையும், காசோலை ஒன்றினையும், திருநெல்வேலி கிழக்கு திரு பி ஸ்ரீஸ்கந்தராஜா என்பவர் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கொள்ளைகளோடு சில்லறைத் திருடர்களும் கைவரிசை

(மானிப்பாய்)

பயங்கர கொள்ளைகளும் வீடுடைப்புத் திருட்டுக்களும் ஒருபுறம் யாழ்ப்பாணத்தை சிறிது கலக்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் சில்லறைத் திருட்டுக்களும் யாழ்ப்பாணத்தில் சிறிது அதிகரித்துவருகின்றன.

பாடசாலை மீண்டும் ஆரம்பமாகிவிட்டதைப் பயன்படுத்தி சில சில்லறைத் திருடர்கள் அப்பாவிச் சிறுமிகள் காதில் அணிந்துசெல்லும் காதணிகளைத் தந்திரமாக ஏமாற்றிக் கழற்றிக்கொண்டு கம்பிநீட்டிவிடும் சம்பவங்கள் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் இடம்பெற்றுள்ளன.

ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள சில பாடசாலைகளின் ஆரம்பபிரிவு மாணவிகள் சிலரின் காதணிகளை "சொக்க வேட்" கொடுத்து ஏமாற்றி இவ்விதம் சில திருடர்கள் பறித்துச்சென்றுள்ளார்கள்.

சில பெற்றோர் இதுசம்பந்தமாக புகார்களைத் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக காதணிகளை அணிந்துவரும் வழக்கம் மாணவிகள் மத்தியில் அருகிவருவதுபோல் தெரிகிறது.

(அ)

கலைமகள் ச. க. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆத்திசூடி வீதி கலைமகள் சனசமூக நிலையத்திற்கான புதிய நிர்வாகிகள்தெரிவு போஷகர் திரு. க. செ. தியாகராசா சர்நீ தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: க. செ. தியாகராசா ஜே. பி., உபதலைவர்: சி. வரதராசா, செயலாளர்: சி. நவரட்ணம், உபசெயலாளர்: சு. நித்தியானந்தன், பொருளாளர்: வி மகாலிங்கம், உதவிப் பொருளாளர்: அ. செல்வம், விளையாட்டுத் தலைவர்; க. புவீந்திரன், கலைத் தலைவர்: இ. நாகதாஸ், போஷகர்: கி. தர்மலிங்கம்,

(அ)

வங்கிக் கணக்கு வைக்க அனுமதி

(சுழிபுரம்)

யாழ் மாவட்ட உப அலுவலகங்கள் இம் மாதம் முதல் ரூபா ஐயாயிரத்துக்குட்பட்ட தொகையை வங்கியின் கணக்குவைத்து நிர்வகிக்கவும் ஏற்ற காசோலைகளை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் மாதக்கணக்காகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளக் காத்திருந்தவர்கள் சுலபமாகப் பணத்தை உடன் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஊழியர் வேதனம், பத்திரிகைக் கட்டணம், நிர்வாகச் செலவுகள் போன்ற முக்கிய விடயங்கள் இதில் அடங்கும்.

சுழிபுரம் உப அலுவலக நிர்வாகி சங்கானை மக்கள் வங்கியில் இதற்கான புதிய கணக்கைத் திறந்துள்ளார்.

(அ)

யாழ். முதல்வர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் இருந்து ஆட்சேபனை வராது எனவே தாம் எதிர்பார்ப்பதாகவும் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்திருந்தார்.

ஆயினும் திவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினம் அவர்கள் ஆட்சேபித்திருப்பதால் அந்த முடிவு தற்காலிகமாகப் பின்போடப்பட்டுள்ளது. விரைவில் வடபிரதேசத்திய போக்குவரத்து அதிகாரி வடமராட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் ஒரு மாநாட்டில் இது விடயம் ஆலோசிக்கப்பட நடவடிக்கை எடுத்துவருகிறோம். யாழ். நகரில் மத்திய ஸ்தானமான பெரியகடைப்பகுதி வாகனப் போக்குவரவு மற்றும் பாதசாரிகளின் நடமாட்டத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் சம்பந்தப்பட்ட சகலரது ஒத்துழைப்பையும் இச்சபை நாடி நிற்கிறது.

இ. விசுவநாதன்
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

"முதியோர் ஆதரவு இல்லங்களை அமைப்பதில் அதிக கவனம் தேவை"

'அமிர்' கோரிக்கை

(மாவிட்டபுரம்)

"மேல்நாடுகளில் ஆயாக்கள் மூலமாகவே பெற்றோர் தமது பிள்ளைகளை வளர்க்கிறார்கள். ஆனால் எமது பெற்றோர்களோ தம்மையே தியாகம் செய்து பிள்ளைகளை வளர்க்கிறார்கள் தமது பொருட்களையும் காணிகளையும் விற்று பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுகிறார்கள். ஆகவே அவ்வாறான வர்கள் முதுமை நிலையடையும் போது அவர்களை நாம் பேணிப் பாதுகாக்கவேண்டும். இன்று நடைபெறும் முதியோர் தின விழாக்கள் எமது கடமையை எமக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன.

இவ்வாறு மாவிட்டபுரம் கிராமோதயசபையின் முதியோர்தினவிழா மாலை கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

மாவிட்டபுரம் கிராமோதய சபைத்தலைவர் திரு. எஸ். சிவ மகாராஜா தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'முதியோர்களை தவிக்க விட்டு வெளிநாடு செல்வதும் அவர்களை தகுந்த முறையில் பராமரிக்காது விடுவதும் நல்ல தல்ல. மேல் நாடுகளில் ஆதரவு இல்லங்களை அமைத்து முதியோர்களை பராமரிக்கிறார்கள் ஆனால் நமது மத்தியில் ஆதரவு இல்லங்களும் போதியளவு இல்லாமலிருக்கின்றன. முதியோர்களை பராமரிப்பதிலும் அவர்களுக்கான ஆதரவு இல்லங்களை அமைப்பதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும் முன்னேறிவரும் ரஷ்யா, சீனா போன்ற கம்யூனிச நாடுகளில் 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களே மக்களுக்கு தலைமை தாங்கி அவர்களை சரியான பாதையில் இட்டுச் செல்கிறார்கள். அதேவே முதியோர் சமுதாயத்திற்கு அத்தியாவசியமானவர்கள் என்பதை நாம் உணர வேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் திரு. க. இராமநாதன் பேசுகையில் யாழ். மாவட்டத்திலுள்ள 40 வீதமான முதியோர்களில் 10 வீதமானவர்கள் கஷ்டமான நிலையில் உள்ளனர் அரசும் சில உதவிகளை மட்டுமே செய்யக்கூடியதாக உள்ளது. கிராமங்களை தோறும் ஆதரவு இல்லங்களை அமைத்து ஒருவருடத்திற்கு நடத்திஞல் பிள்ளைகள் சமூகசேவைப்பகுதி அதனைப் பொறுப்பேற்று நடத்த முன்வருவதாக எம்மிடம் எம்மூர்.

உருப்பராய் செல்வபுரத்தில் 10 வருடகாலமாக நிலவிய தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் கஷ்டப்பட்ட 75 குடும்பங்களுக்கு யாழ். ரோட்டறி கழகத்தினால் கட்டப்பட்ட கிணற்றை யாழ் ரோட்டறிக் கழகத் தலைவர் டாக்டர் எஸ். எஸ் சேனதிராசாவும், கழக உறுப்பினர்களும், மக்களிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம். (உ)

உடனடி நியமனம் வழங்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டரை ஆண்டுகளாகக் கல்விஅமைச்சும், கல்விச் சேவைக்குழுவும் சுவீகரிக்கப்பட்ட தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் சிலருக்கு அப்பாடசாலைகளில் நியமனம் வழங்குமாறு பலமுறை பணித்திருந்தும் இன்றுவரை ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்காமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜயமாலேக்கு சுட்டிக்காட்டியதன் விளைவாக அவ்வாசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குமாறு பண்டாரவளைச் கல்விப்பணிப்பாளரைக் கல்வி அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

இருவார காலத்தினுள் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்காவிட்டால் அவரீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் இ. த. ஆ. சங்கத் தூதுக்குழுவிடம் செயலாளர் உறுதியளித்துள்ளார். இதுதொடர்பாக இது வரைகாலமும் கல்வி அமைச்சில் உள்ள கல்விப் பணிப்பாளர்களே சம்பந்தப்பட்ட பிராந்தியப் பணிப்பாளர்களுக்கு கடிதங்களை அனுப்பிவைத்தனர். இம்முறை இ. த. ஆ. சங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களே கையொப்பமிட்டுள்ளதுடன் நேரடியாக அவரே கடிதத்தினை அனுப்பிவைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதிப்பீடு தயாரிக்கும் வேலை!

(சித்தன்கேணி)

வலிமேற்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக் குட்பட்ட பத்து கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலுமுள்ள உருளைக் கிழங்கு பயிர்ச்செய்கையாளருடைய மதிப்பீடொன்றைத் தயாரிக்கும் வேலையில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். மதிப்பீடொன்றை தயாரித்து இம்மாதம் 27ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ செந்தில்வடிவேல் மதிப்பீடு தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கூறியுள்ளார். வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சங்கானை கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலேயே கூடுதலானவர்கள் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

"ரூபவாஹினியும் கூட்டணி நிலையும்"

ஈழவேந்தன் சாடுகிறார்

(வவுனியா)

ரூபவாஹினி என்ற வட்மொழியின் வேரில் பிறந்த சிங்களச் சொல்லினை தொலைக்காட்சி என மாற்றவேண்டுமென இண்மையிலும், இதற்கு முன் பல தடவைகளிலும் பாராளுமன்றத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குரல் எழுப்பியபோதும், தேசிய ஒற்றுமை என்ற பெயரில் ரூபவாஹினி என்ற பெயரினை தொலைக்காட்சி என மாற்றமுடியாது என அரசின் சார்பில் விடையளிக்கப்பட்டது.

நாளை தேசிய ஒற்றுமை என்ற பெயரில் தமிழ் குழந்தைகளுக்கு சிங்களப்பெயர்களை வைக்க அரசு கட்டளையிட்டாலும் வியப்பாய் இராது.

இவ்வாறு தமிழ்ஈழ விடுதலை அணியின் பொதுச்செயலாளர் திரு. ஈழவேந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:

சிங்கள சொற்களை சிலவற்றை தமிழில் ஊடுருவச் செய்துள்ளது அரசு.

இலங்கை மத்தியவங்கியில் நான் பணிபுரிந்த காலத்தில் வங்கிக்கு இடப்பட்டிருந்த சிங்களப் பெயரினையும், வங்கி வெளியிடயிருந்த பணத்தாள்களை கூட மாற்றத்துக்குள்ளாகச்செய்து வெற்றியீட்டிய நிகழ்ச்சியையும் இங்கு நினைவு கொள்ளவிரும்புகின்றேன்.

ஆனால் தமிழ்மக்களுடைய ஒருமித்த ஆதரவைப்பெற்ற தமிழ் ஈழத்தினை பெற்றுத்தருவதாகக் கூறி அதிகாரம் பெற்ற த. வி. கூட்டணியினர் தமிழில் புகுந்துள்ள சிங்கள சொற்களை நடுத்து நிறுத்தமுடியாது நிற்பவர்களை எப்படி தமிழ்ஈழத்தினைபெற்றுத்தருவார்கள் என எதிர்பார்க்கமுடியும்?

அரசுடன் ஒருவேளையில் உறவும், ஒருகாலத்தில் எதிர்ப்பும் என்ற முறையில் அங்கம் வகித்து பதவிஏற்கத் துடிக்கின்ற நிகழ்ச்சியினை எண்ணும் போது கூட்டணி தமிழ் மக்களுக்கு என்றுவது வாழ்வு கொடுக்குமா என்பது கேள்வியாகவுள்ளது.

குடியாட்சி அமைப்பான வெற்றி என்பது மக்களின் விழிப்புணர்ச்சியில் தங்கியுள்ளது. தமிழ்மக்களை அரசியல் விழிப்புணர்ச்சியோடும் தாம் தெரிகின்ற தலைவர்களை தட்டிக் கேட்கும்விடின் தமிழ் இனம் விரைவில் பூண்டோடு அழிக்கப்படுவது உறுதி.

ஊழியர் நலன் கருதி புதிய சட்டமூலம்

(கொழும்பு)

அரச, தனியார் ஸ்தாபன ஊழியர்களின் நலனை முன்னிட்டு புதிய சட்டமொன்றை நீதியமைச்சு கொண்டுவரவுள்ளது.

கடமைவேளைகளில், காயங்கள் மற்றும் விபத்துக்களை ஏற்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு 'நஷ்ட ஈடு' வழங்கும்படி பணிப்பதே புதிய சட்டமூலமாகும். இப்புதிய சட்டமூலம் அரச, தனியார் ஸ்தாபனங்களில் உள்ள சகல தரத்தினருக்கும் செல்லுபடியாகும்.

'ஊழியர் நஷ்ட ஈடு' சட்ட மூலம் என்று இப்புதிய சட்ட மூலம் அழைக்கப்படவிருக்கிறது. (சி)

தந்திக்கம்பிகள் திருட்டு

(காலி)

மாத்தறையிலுள்ள சுந்தரை, கம்புறுகமுவை ஆகிய இடங்களிலிருந்து 2000 யார் தந்தி செப்புக்கம்பிகள் திருடப்பட்டுள்ளன.

இத் தந்திக் கம்பிகளின் பெறுமதி 5,250 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (வெ)

நிரந்தர அதிபராக நியமனம்

(பண்டத்தரிப்பு)

மாரீசன்கூடல் இளவாலை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயத்தின் நிரந்தர அதிபராக திரு எம். சேவியர் பெர்ணண்டோ கல்வி திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1979ம் ஆண்டுமுதல் பதில்அதிபராக இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றிய இவர் 4ம் தர அதிபராக பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்.

திரு சின்னத்தம்பி தில்லையர் ஓய்வு பெற்ற சிவில்சேவையாளரும், சமாதானநீதவான், எழுத்தாளர் சட்டத்தரணியுமாவார். இவர் தமது 81-வது வயதில் காலமானார். சாதாரண எழுதுவினைஞராக அரசசேவையில் சேர்ந்த இவர் அச்சேவை கொடுக்கக் கூடிய அதிசிரேஷ்டபதவிக்கு உயர்த்தப்பட்ட பின்னரேட கமையிலிருந்து 60 வயதில் ஓய்வெடுத்து, அதன் பின்னர் 61 வயதில் சட்டக்கல்லூரியில்சேர்ந்து பரீட்சையில் சித்தி அடைந்து சட்டத்தரணியானார்

அந்தக் காலத்தில் கல்வித் தகமைக்குச் சான்றாக இருந்த கேம்பிறிச் சர்வகலாசாலையின் சிரேஷ்ட தராதரப் பத்திரமும், லண்டன் புதுமுகத்தேர்விலும் சித்திபெற்றார். இவரைத்தொடர்ந்து திரு. தில்லையம்பலம் ஆங்கில வித்தியாசாலையில் ஆசிரியராகத்தன் கடமையை ஆரம்பித்து பின்னர் அரசசேவையில் எழுதுவினைஞராகச் சேர்ந்து பின்னர் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் எழுதுவினைஞராகவும், அதே மன்றத்தில் செயலாளராகவும் கடமையாற்றிச் சட்டத்துறைபிலுள்ள நுணுக்கங்களையும் ஆராய்ந்து அங்குள்ள சட்டத்தரணிகளோடு வாதாடும் தன்மையையும் கொண்டார். அவர் அரசசேவையில் நல்ல ஏற்றம் பெற்ற அக்காலத்தில் மிகவும் திறமையாய்ந்த அரச நிர்வாக சேவையில் உழைப்பின் பயனாக உரிய இடத்தைப்பெற்று அரிய திறமையுடன் பணிபுரிந்தனர். ஆங்கிலச் செய்திதாளுக்கு கட்டுரைகள் எழுதி வழங்குவது அவருக்கு ஒரு வழக்கமாக இருந்தது. மற்றவர்கள் ஓய்வுபெற எண்ணும் போது, 61 வயதில் சட்டக்கல்லூரியில் சேர்ந்து சட்டத்தரணியாகத் தமது 65 வயதில் வெளிவந்த சுமார் 17 வருடகாலமாகச் சட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்பதை அவதானிக்கும்பொழுது அவரின் ஊக்கம், விடாமுயற்சி ஆகியவை கண்கூடாகத் தெரிவருகின்றது. இலங்கையிலே இவர் தான் முதல் மனிதர் 61 வயதில் சட்டத்தரணிக்கல்லூரியில் சட்டக் கல்வி பயிலச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களுடைய மிக முக்கிய மான கொள்கையில் ஒன்று சோம்பல் என்பது இருக்கக் கூடாது என்பதே. ஒரு முறை கொழும்பிலிருந்து 72 மைல் தொலையிலிருக்கும் கண்டி நகருக்கு 3 இளைஞர்களுள் ஒருவராக போட்டிக்குகொண்டு நடையாக 18 மணித்தியாலத்திற் சென்று ஒரு சாதனையை 1931ம் ஆண்டில் நிலைநாட்டினார்.

— அன்பன்

கலைவிழாவும் விளையாட்டுப் போட்டியும்

(சுண்டிக்குளி)

பொலிகண்டி பாரதி சன சமூகநிலையத்தினரின் தைப் பொங்கல் கலைவிழாவும் விளையாட்டுப் போட்டியும் தைப் பொங்கல் தினத்தன்றும், அடுத்த நாளும் தொடர்ந்து நடைபெற்றன.

பொங்கல் தினத்தன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளுக்கு நிலையத் தலைவர் வி. கே. பாலசிங்கம் தலைமைதாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி வி. கே. ஈசுரபாதமும், சனசமூகநிலைய சமாஜ தலைவர் எம். கணேசலிங்கமும் கலந்துகொண்டனர்.

விளையாட்டுப் போட்டிகளை கொற்றுவத்தை அ.மி.த.க. பாடசாலை அதிபர் வி. வேலுப்பிள்ளை மங்கள விளக்கேற்றியும், ஒலிம்பிக் தீபத்தை நிலையத்தின் முன்னைநாள் தலைவர் சி. சந்திரசேகரமும் ஏற்றி ஆரம்பித்துவைத்தனர். விளையாட்டு நிகழ்ச்சிகளை நிலைய விளையாட்டுவீரரும் மல்யுத்த வீரருமான வி. திருநாவுக்கரசு ஆரம்பித்துவைத்தார்.

இல்ல விளையாட்டுப்போட்டிகளில் சோழன் இல்லம் முதலாமிடத்தையும், பாண்டியன், சேரன் இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டன. விளையாட்டுக்களில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை அதிபர் ஏ. இரத்தினசபாபதி வழங்கினார்.

பாரதி சனசமூகநிலைய வீரர்களின் 'எல்லே' விளையாட்டும் வல்லிப்பந்தாட்டமும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன.

இரண்டாம் நாள் கலைவிழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராஜலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். நிலையச் செயலாளரும், நிலைய விளையாட்டுத்துறைத் தலைவருமான கே. எஸ். இருந்தவராசா நன்றியுரை கூறினார்.

சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளாகத் தெரிவு பெற்று பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

9 வயது பிரிவில்: சி. உதயகுமார், வே. வேலராஜினி. 15 பிரிவில்: சி. ஜெயவனிதா. 17 வயது பிரிவில்: சி. ஜெயநிதி. 19 வயது பிரிவில், சி. இராமநாதன், சி. ஜெயஸ்ரீதரன். 19 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில்: க. பரஞ்சோதி, நா. உஷாதேவி.

[உ]

நீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
[இருவேடம்] - ரதிஞ
எங்க வீட்டுப் பிள்ளை

வெலி [ஈரனிப்பாய்
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு 2-30
சந்திரசேகர் - சுஹாஜினி
பாலைவனச்சோலை

கடைசி இலதினங்கள்
ராஜா [யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(மலேசிய கலர்)
3-2-83 முதல்
இவாஜி-சாவித்திரி
கர்ணன்
[ஈஸ்ட்மன் கலர்]

இன்றையபலன்..,

[2ம் பக்கத் தொடர்ச்சி]

விருச்சிகம்: அடுத்தவரை நம்புவதுடன் ஆபத்து மிக உண்டு. வீண் செலவால் விபரீதம் விளைந்திடும். நண்பர்கள்மூலம் பணத்தை அபகரித்துக் கொள்ளுவார்கள்.

தனுசு: தந்தைவழி மூலம் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். தடைகள் எல்லாம் நீங்கி பொடியாகி தடைகள் நீங்கும். தனிக்கொடி பறக்க விடுவீர்.

மகரம்: வித்தையில் வெற்றிகாணுவீர், வேண்டியது கிடைக்கும், பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்து சேரும், வெளியிடத்தில் இருந்து செய்தி கிடைக்கும்.

கும்பம்: வரவில் உயர்வு காணும், வாழ்க்கையில் முன்னேற்றம் தெரிபடும், கலைவர்களின் வாழ்த்தும் ஆசியும் கிடைக்கும், பெரியவர்களின் உதவியும் உண்டு.

மீனம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கு வேடிக்கை காட்டும், நிதானம் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

தென்னகத்தில் பல படங்களின் சாதனைகளை முறியடித்து "பாரதிராஜா"வின் பொன்விழா சித்திரம்.
தினசரி 4 காட்சிகள்
ஹரன் (யாழ். நகர்)
"நிறம் மாறு பூக்கள்" புகழ்
சுதாகர் ராதிகா நடித்த
கிழக்கே போகும் ரயில் (கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் : ஜோதி
ரயில் பயணங்களில் (கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி - விஜயா - நம்பியார் நடித்த
ராமன் எத்தனை ராமனடி

சாந்தி- (யாழ்நகர்) TODAY ONLY
தினசரி 5 காட்சிகள்
Peter Cushing — Shane Briant in
FRANKENSTEIN AND THE MONSTER FROM HELL
Action-Horror-Adults only - color
Your blood will run cold when the Monster Rises

மனோகரா (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30,
சிவாஜி - பத்மினி
பேசும் தெய்வம்
22-1-83 முதல் FOR YOUR HEIGHT ONLY
(Bond Film)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
4-வது HOUSE FULL வாரம்
அலைமோதும் பெண்கள்கூட்டம்
ஆனந் [சிவாஜிகணேசன்]
தன்னுடைய காதலிக்காக (வாணிஸ்ரீ)
கட்டிய மாளிகை
உங்கள் குடும்பத்துடன் விஜயம்செய்யுங்கள்
சிவாஜி வாணிஸ்ரீ பாலாஜி நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

பெரும் உதைபந்தாட்டம்:

இந்தியவிமானபடை கோஷ்டி யாழ்.குழுவுடன் மோதும்

(யாழ்ப்பாணம்)

அகில இந்திய விமானப் படைத் தெரிவு உதைபந்தாட்டக்கோஷ்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் உதைபந்தாட்டப்போட்டி யொன்றில் கலந்துகொள்கிறது.

யாழ். உதைபந்தாட்ட லீக் தெரிவுக் கோஷ்டியுடன் இந்திய தெரிவுக் கோஷ்டி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மோதுகின்றது. அகில இந்தியத் தெரிவுக் கோஷ்டியில், பல புகழ்வாய்ந்த வீரர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டிக்கு அகில இலங்கை முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. கே. நடராசா பிரதம அதிதியாகக் கலந்துகொள்கின்றார். இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ். உதைபந்தாட்ட லீக் மேற்கொண்டு வருகிறது.

யங் ரேயல் சம்பியன்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடந்த இப் போட்டியில் யங் ரேயல் விளையாட்டுக் கழகம் பெரியவிளான் உதயசூரியனை 3-1கோல்களால் வென்று சம்பியனாகியது.

ஜொலி போய்ஸ் வெற்றி

(வவனியா)

பொங்கல் விளையாட்டு விழாவில் வவனியா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பீட்டியது.

வவனியா நகரசபை முற்றவெளியில் மேற்படி கழகத்துக்கும் யாழ் நாவாந்துறை சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்துக்கு மிடையிலான கிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

ஜொலி போய்ஸ் கழகம் மூன்று கோல்களையும், சென் மேரீஸ்கழகம் இரண்டு கோல்களையும் போட்டன.

பொங்கல் தினத்தன்றே இப் போட்டி நடந்தது.

(அ)

முதியோர் விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

முதியவர்கள் கலந்து கொண்ட விளையாட்டுப்போட்டிகளைப் பார்க்கும்போதுஎமது சிறுவயதே ஞாபகத்திற்கு வருகிறது முதியவர்களைக்காணும் போதெல்லாம் எனக்கு என் தாய், தந்தையரின் நினைவுகளே நினைவில் வருகிறது'.

இவ்வாறு கடந்த வெள்ளிக் கிழமை மன்னார் திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற முதியோர்தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் எம். பி. திரு பி. எஸ். சூசைதாசன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு பி.எம். செபமாலை, மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜே. செந்தில்நாதன், மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. வி. கைலாசபிள்ளை, மன்னார் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தலைவர் ஜனாப் கே. எம். ஏ. காதர், அன்பு ஜவகர், நாளட்டான் உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட் பந்துவீச்சுக்கு ஆட்டக்காரர் பலி!

(கொழும்பு)

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபன கிரிக்கெட் வீரர் ஒருவர் நெஞ்சில் பல மாகபந்துவீசப்பட்டதனால்மயங்கி வீழ்ந்து மரணமானார்.

நேற்றுச்சம்பவம் கொழும்பு பி. ஆர். சி.மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இறந்தவர் காமினி ரதிஞயக்கா என்ற 20 வயது இளைஞராவார்.

பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கும், அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு மிடையிலேயே இந்த கிரிக்கெட் பந்தயம் நடைபெற்றது.

காமினி ரதிஞயக்கா தமது அணியின் முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்து துடுப்படித்து ஆயத்தமானார், அப்போதே இவரை நோக்கி வீசப்பட்ட முதலாவது ஓவரின் நான்காவது பந்து வேகமாக நெஞ்சின் இடப்பக்கத்தைத் தாக்கியது.

இதனைத் தொடர்ந்து வீரர் காமினி சிறிதுநேரம் கஷ்டப்பட்டார். பின்னர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு அடுத்த பந்துக்கு முகங்கொடுக்கலானார். இந்த நேரத்திலேயே திடீரென மயக்கமுற்று நிலத்தில் இவர் சுருண்டு வீழலானார்.

உடனடியாக இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். ஆயினும் அங்கு இவர் உயிர்பிரிந்தது.

மரண விசாரணைகளின் போது பெட்ரோலியக்கூட்டுத்தாபனஅணித்தலைவர் டி. ஆர். உடவத்த வழங்கிய சாட்சியத்திலேயே மேற்கண்ட தகவல்கள் வெளியாகின. (கி)

மருதனுமடம் கொள்ளைச் சம்பவம்:

சந்தேகநபர்கள் ரூ. 2,000 பிணையில் செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

மருதனுமடத்தில் இடம்பெற்ற இரு கொலைகள் சம்பவங்கள் தொடர்பாக நிமானத்தில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களில் முதலாவது சம்பவத்தில் ஒருவரும் மற்றயதில் ஐவரும் தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மருதனுமடத்தில் திருமதி ஆறுமுகம் சரஸ்வதி என்பவரின் வீட்டில் இடம்பெற்ற 45 ஆயிரம் ரூபா நகை, பணம் கொள்ளை தொடர்பாகவும், அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். செல்வராசா என்பவரது வீட்டில் இடம்பெற்ற 7,250 ரூபா கொள்ளை தொடர்பாகவும் உரும்பராய் ஆனந்தன் எனப்படும்சதாசிவம், சதானந்தசிவம், பெரியசாமி இராஜேந்திரம்சுப்பையர சபாரத்தினம், கறுப்பையர செல்வம், நடராசர பரமஜவம் ஆகியோர் கைதாகி நிமானத்தில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பாக ஏற்கனவே நடந்த அடையாள அணிவகுப்பில் முதலாவது சம்பவம் தொடர்பாக முதலாவது நபரைத் தவிர ஏனையோர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இரண்டாவது சம்பவம் தொடர்பாக எவரும் அடையாளம் காணப்படவில்லை.

இந் நபர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் முதலாவது சம்பவத்தில் அடையாளம் காணப்படாத முதலாவது நபரை 2000 ரூபா பிணையில் செல்ல நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் அனுமதித்து ஏனையோரை நிமானத்தில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இரண்டாவது சம்பவத்தில் எவரும் அடையாளம் காணப்படாமையால் ஐவரையும் தலா 2000 ரூபா பிணையில் செல்லுமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி எம். ஸ்ரீதரன் ஆஜரானார். [வெ]

புதிய உறுப்பினர்கள்

(கரவெட்டி)

கட்டைவேலி -நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் நெல்லியடி இராசவிதி சம் மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதியஇயக்குநர் சபை உறுப்பினர்களாக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள்த, சிதம்பரப்பிள்ளை, சி. செல்லையா, சி மாணிக்கவாசகர், ஆ. க. தம்பையா, க. இராசரத்தினம், சி. க. இராசேந்திரம்.

பொதுக்கூட்டத்தில் எழுபதிற்கும் மேற்பட்ட பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க)

நெடுந்தீவு மேற்கு கிராமோதயசபை தீர்மானம்

(நெடுந்தீவு)

காலநடைகளின் ஏற்றுமதிகள் கட்டுப்பாடற்ற முறையில் இடம்பெறுதலால் எதிர்காலத்தில் காலநடைகள் மூதிரும் அருகிவிடலாமெனவும் இறைச்சிக்காக வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் மாடுகளின் தொகையைக் கட்டுப்படுத்துவதுடன் கன்றுகளையும் பசுமாடுகளையும் எடுத்துச் செல்வது தடைசெய்யப்படவேண்டும். எனவும் நெடுந்தீவு மேற்கு கிராமோதயசபை தீர்மானித்துள்ளது. கூட்டம் மேற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. சி. வ. சண்முகப்பிள்ளை தலைமையில்நடைபெற்றது. தீர்மானத்தின் பிரதி யாழ். மாவட்டசபைத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (வ)

மரண அறிவித்தல்

சரவணமுத்து இராசம்மா

நல்லூர், யமுனா வீதியைச் சேர்ந்த சரவணமுத்து இராசம்மா அவர்கள் காலமாகி விட்டார்கள். இவர் காலஞ்சென்ற சபாபதி சரவணமுத்துவின் அன்பு மனைவியும், டாக்டர் செல்வரத்தினம் (அடாவத்தை), டாக்டர் சபாரத்தினம் (மகப்பேறு வைத்தியர் அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்), சுந்தரலிங்கம் பி எஸ் சி. (இ. போ. ச. மட்டக்களப்பு), திருமதி சந்தையா செல்லம்மா (கல்முனை), திருமதி தம்பி ராசா பராசக்தி அம்மா (பருத்தித்துறை), திருமதி பரமசிவம் சரஸ்வதிஅம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பொ. வி. சந்தையா ஜே. பி. (பிரசித்த நொத்தாரிஸ்—கல்முனை), காலஞ்சென்ற சு. தம்பிராசா (குமாரவேலு மெடிக்கல் ஸ்ரோர்ஸ்—பருத்தித்துறை), திரு. வ பரமசிவம் [முகாமையாளர், புடவைப்பகுதி, யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், ஈமக்கிரிகைகளுக்காக, அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று 21-1-1983ந் திகதி பகல் 12 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

23, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [5913]

புலேந்திரன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தோட்டம் உள்ள பகுதியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாகத் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பிரேரம் சட்டத்தில் இரண்டு குண்டின் சன்னங்களும், 4ம் நம்பர் சிறிய சன்னங்களும் குளியலாக இருக்கக் காணப்பட்டன.

வீட்டின் முன் வாசல் பக்கமாக 'ஷொப்பிங்பாக்' ஒன்றும் வெற்றுத் தோட்டா 12ம் நம்பர் எஸ் ஜி பாவிக்காத ஒரு தோட்டா ஆகியவற்றையும் யாழ்ப்பாண பொலிசார் கண்டெடுத்தனர். வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யு. பி. ராஜகுரு ஸ்தலத்துக்குச் சென்றுபார்வையிட்டார்

மரண அறிவித்தல்

ஜனதாசன்

யாழ்ப்பாணம் ஜோர்ஜ்—ஜனதா ஆகியோரின் அருமைப் புதல்வரும், யாழ்ப்பாணம், ஸ்டார் வெல்டேர்ஸ் உரிமையாளர் கே. டானியலின் பேரப்பிள்ளையுமான ஜனதாசன் காலமானார். அவரின் பூதவுடல் இன்று (21-1-83) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 76|2, கோவில் வீதியிலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

5922

மரண அறிவித்தல்

இராசா சுப்பிரமணியம்

மானிப்பாயைச் சேர்ந்த தலத்துஓயா தமிழ் மகா வித்தியாலய அதிபரும் முன்னாள் சோதிவேம்படி ஆசிரியரும் தோட்ட ஆசிரிய சேவைக்கால சங்க செயலாளருமாகிய திரு. இராசா சுப்பிரமணியம் (20-1-83) வியாழக்கிழமை இறைவன் அடிஎய்தினார்.

அன்னார் சரஸ்வதி தேவியின் அன்புக் கணவரும் நாகராஜேஸ்வரி, ஞானேஸ்வரி, விக்கினேஸ்வரி ரவீந்திரன் (கமத்தொழில் உதவிப் பணிப்பகம் குருநாகல்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாதன் (யாழ். பல்கலைக்கழகம்), ராஜகோபால் காசாளர் (மின்சைவத் தொழிற்சாலை) ஆகியோரின் அன்பு மாமனும் காயத்திரிதேவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புளியடிச் சந்தை ஒழுங்கை மானிப்பாய் தெற்கு மானிப்பாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து ஈமக்கிரிகைக்காக சனிக்கிழமை (22-1-83) காலை 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5919

வகுப்புகளை பகிஷ்கரித்து

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காஷ், மதுரகுமார், ஜூலியர் திரு. பரந்தாமன், வைத்திரி ஆகியோரை சாதாரண சட்டத்தின்கீழ் விசாரணை செய்ய வேண்டும் என்பதே மாணவர்களின் கோரிக்கையாகும்.

5 நிமிடம் கோஷம் எழுப்பினர்

பிற்பகல் 4 மணிக்கு இப் போராட்டத்தை முடித்த மாணவர் அவைத் தலைவர் ஸ்ரீஸ்கந்தராசா, பகிஷ்கரவாத அடைச் சட்டத்தை நீக்கு' என்று 5 நிமிடம் கோஷம் எழுப்பினர். இதனை தொடர்ந்து மாணவர்களும் கோஷம் எழுப்பினர்.

இப்போராட்டம் சம்பந்தமாக ஜனாதிபதிக்கும், தமிழ் எம். பீ. க்களுக்கும், தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் தந்திகள் அனுப்பிவைக்கப்பட்டன. இப்போராட்டத்தின் போது சுலோக அட்டைகளும் வைக்கப்பட்டிருந்தன. [மா]

வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

வெற்றுச் சாக்கு விற்பனை

மேற்படி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் 2500 வரையிலான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமாகவும் ரூபா 250/- கேள்வி வைப்புப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் கட்டி சாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி 27-1-83

இ. சோமசுந்தரம்,
பதில் பொது முகாமையாளர்.

5921

ஓராண்டு நினைவாஞ்சலி

தோற்றம்: 25-1-51

மறைவு: 21-1-82

ஜெயதேவன் நவரட்ணராஜா
(CHIEF ENGINEER I. T. T. NEW SOUTH GATE)

அழியாத் துயர்தந்த அந்தநாள் – உருண்டோடி
ஓராண்டானதோ – அண்ணலே
உங்கள் நினைவு எம் இதயக்கமலங்களில்
அன்புமணம் வீசி நிற்கின்ற வேளையில்
தங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு அன்னை, அம்மம்மா. மனைவி, மகன், அக்காமார், சித்தான்மார், மருமக்கள், மாமா, மாமி பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

"ஜெயகிரி", கோண்டாவில்

5917 21—1—83

* வெளிநாட்டுப் பயணமா?
யாழ்ப்பாணத்திலேயே
குறைந்த கட்டணத்தில்
எந்த நாட்டிற்கும்
விரும்பிய விமானத்தில்
செல்ல
★விமான டிக்கட்டுகள்
★பிரயாண காசோலைகள்
(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)
வங்கியில் அறவிடப்படும் அதே
கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

மக்கினென்
டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154

இதோ ஓர் இனிப்பான செய்தி!

சுசுக்கி
கே 125 சுப்ரீம்
சிக்கனத்திற்கு
ஏற்றது.

எஸ். சின்னத்துரை அன் கம்பனி
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

'சுசுக்கி' மோட்டார் சைக்கிள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு "K D K" மேசை விசிறி இனாமாக வழங்கப்படும்.
போன்: 23357

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அதாவனத்தாரால் பதிவாளர் அலுவலகம் கொழும்பில் கொத்து லீதி 66-ம் இலக்க முகவரியில் 1958-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் திகதி அன்று வெளியிடப்பட்டது: Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegrams: Eelanaadu, Telephone: 22589 = 24126